## மஞ்சள் விலை வீழ்ச்சி: விவசாயிகள் பாதிப்பு

- கே. தர்மராஜ் -

First Published : 21 Jan 2012 01:06:26 PM IST

பெரம்பலூர், ஜன. 20: நிகழாண்டு மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், அதைச் சாகுபடி செய்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் முட்டா, கஸ்தூரி, விரலி, கரி, நாக, காஞ்சிரத்தின், குரங்கு, காட்டு, பலா, மர, ஆலப்புழா (தாவரவியல் பெயர் குர்குமா லுங்கா) உள்ளிட்ட ரகங்களில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது.

இவற்றில் முதல் ரகமாகக் கருதப்படும் ஆலப்புழை, தமிழகத்தில் வெப்ப மண்டலப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. வடிகால் வசதியுள்ள செம்மண் நிலங்கள் மஞ்சள் சாகுபடிக்கு ஏற்றவை. ஆண்டுக்கு சராசரியாக 1,500 மில்லி மீட்டருக்கும் அதிகமாக மழை பெய்யும் இடங்களில் மஞ்சள் மிகவும் செழிப்பாக வளரும்.

ஒவ்வொரு ஆண்டும் மே, ஜூன் மாதங்களில் சாகுபடி செய்யப்படும் மஞ்சளுக்கு, நிகழாண்டு தொடக்கம் முதலே விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தமிழகத்தில் அதிகளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்களில் ஈரோடு, சேலம் மாவட்டங்களுக்கு அடுத்ததாக பெரம்பலூர் மாவட்டத்தில் 1740 ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செயயப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக அறுவடை செய்யப்பட்ட மஞ்சளை நேரடியாக மண்டிகளுக்கு கொண்டு சென்று விவசாயிகள் விற்பனை செய்தனர். ஆனால், தற்போது இடைத் தரகர்கள், ஆன்லைன் வர்த்தகம் மூலம் விற்பனை செய்யப்படுவதால் மஞ்சள் விலை ஏறுவதும், இறங்குவதுமாக உள்ளது.

கடந்த 2008-ல் ஒரு குவிண்டால் மஞ்சள் அதிகபட்சமாக ரூ. 4 ஆயிரத்து 700-க்கு விற்பனை செய்யப்பட்டது. 2009-ல் மஞ்சள் சாகுபடி குறைந்ததால், குவிண்டால் ரூ. 11 ஆயிரத்து 400-க்கு விற்பனை செய்யப்பட்டது.

அப்போது பெரும்பாலான விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டினர். 2010 தொடக்கத்தில் மஞ்சள் வரத்து குறைந்ததால், குவிண்டால் ரூ. 16 ஆயிரத்து 700-க்கு விற்பனை செய்யப்பட்டது.

அதைத்தொடர்ந்து, அதே ஆண்டு இறுதியில் மஞ்சள் அறுவடை தொடங்கியதும், புதிய மஞ்சள் வரத்து கணிசமாக அதிகரித்தது. இதனால், மஞ்சள் விலை படிப்படியாகக் குறைந்தது. கடந்த 2 ஆண்டுகளாகத் தொடர்ந்து மஞ்சள் விலை உயர்ந்ததால், நிகழாண்டு அதிகப் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். ஆனால், தற்போது ஒரு குவிண்டால் மஞ்சளை ரூ. 3400-க்கு மட்டுமே வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். மேலும், மஞ்சள் பயிரில் ஏற்பட்ட நோய்த் தாக்குதலால், நிகழாண்டு மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால், மஞ்சள் சாகுபடி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து பெரம்பலூர் மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கூறியது:

கடந்த மூன்று ஆண்டுகளாக மஞ்சள் விலை படிப்படியாக உயர்ந்தது. மேலும், 2010-ல் விளைச்சலும் இரு மடங்காக அதிகரித்தது. இந்த நிலையில், தற்போது மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், சாகுபடி செய்ததற்கு செலவிட்ட தொகையைக்கூட திரும்பப் பெற முடியாமல் விவசாயிகள் நஷ்டமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதே நிலை நீடித்தால், மஞ்சள் சாகுபடி செய்யும் விவசாயிகள், கரும்பு, கிழங்கு, நெல், வாழை உள்ளிட்ட மாற்றுப் பயிர் சாகுபடிக்கு மாறும் நிலை ஏற்படும்.

எனவே, மஞ்சள் சாகுபடி விவசாயிகளின் நலன் கருதி, ஒரு குவிண்டாலுக்கு ரூ. 15 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றனர் அவர்கள்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

கொலக்கம்பை பகுதியில்

# 'ஜமுனா பேரி' வகை ஆடுகளை அதிகம் வளர்க்கும் விவசாயிகள்

கொலக்கம்பை, ஜன.21-
கொலக்கம்பை பகுதி விவசாயிகள் 'ஜமுனா பேரி' வகை ஆடுகளை வளர்க்க விரும்புகிறார்கள்.

### ஆடுகள்

கொலக்கம்பை அருகே மூப்பர்காடு, பழனியப்பா, பரளி, சாம்பூர் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் பலர் வளர்த்து வருகிறார்கள். அவர்கள் வெள்ளாடு வகையை சேர்ந்த 'ஜமுனா பேரி' என்ற வகை ஆடுகளை பெரும்பாலானோர் வளர்த்து அதன் மூலம் வருமானம் ஈட்டி வருகின்றனர்.

இந்த ஆடு வெள்ளாடு வகையை சேர்ந்ததாக இருந்தாலும், இதன் காதுகள் நீளமாக காணப்படும். உடலின் தோல், கால் உள்ளிட்டவைகளின் பருமன் அதிகமாக இருக்கும். இதன் எடைகளும் கூடுதலாக இருப்பதால் விவசாயிகளுக்கு நல்ல பயன் உள்ளதாக அமைந்துள்ளது.

### கூடுதல் பால்

இது குறித்து குன்னூர் வனத்துறை ரேஞ்சர் பால்ராஜ் கூறியதாவது:-

'ஜமுனா பேரி' வகை ஆடு வெள்ளாடு வகையை சேர்ந்தது. சேலம் மேச்சேரியில் உள்ள தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறையினர், இந்த வகை ஆடுகளை உற்பத்தி செய்து பராமரித்து வருகின்றனர். அதன் பிறகு ஆட்டை விற்பனை செய்து வருகின்றனர். வெள்ளாட்டை போன்ற உருவத்தில் இருந்தாலும் காதுகள் வித்தியாசமாகவும் மாறுபட்டும் இருக்கும்.

வெள்ளாடுகளை விட 40 சதவீதம் வளர்ச்சி அதிகமாக இருக்கும். அதே போன்று வெள்ளாடுகள் குறைந்தது 250 மில்லி முதல் 300 மில்லி வரை பால் கொடுக்கும். இந்த ஜமுனாபேரி ஆடு 25 சதவீதம் கூடுதலாக பால் கொடுக்கும்.

### நல்ல லாபம்

இந்த வகை ஆடுகள் அதிக வெப்பம், குளிர் இல்லாமல், மிதமான தட்பவெப்ப நிலையில் உள்ள பகுதியில் நன்கு வளரக்கூடியது. சாதாரண வெள்ளாடுகள் சாப்பிடும் உணவுகளை இந்த ஆடுகள் சாப்பிட்டாலும், அவற்றை விட கூடுதலாக உணவு உட்கொள்ளும் தன்மை உடையது.

இதன் எடை அதிகமாக இருப்பதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் தரும் தொழிலாக இருக்கிறது. இதன் காரணமாக கொலக்கம்பை பகுதிகளில் உள்ள கால்நடை பராமரிப்பாளர்கள் இந்த ஆடுகளை அதிகம் வளர்த்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.



'ஜமுனா பேரி' வகை ஆடு.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,880-3,030

**மணிலா பயறு**

80கிலோ கொண்ட மூட்டை
4,100-4,150

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால்
(வரி உள்பட) 10,075.00

**கடலை புண்ணாக்கு**

70கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட ) 1,600.00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கொண்ட டின்
(வரி உள்பட) 1,724.00

**நல்லெண்ணெய்**

குமாகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா புவனேசுவரி,பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்
ஒரு குவிண்டால் (வரி உள்பட)
11,750.00
அக்மார்க் 1750-1850

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால்
(வரி உள்பட) 9,500.00
15கிலோ டின் (வரி உள்பட) 1,780.00

**சூரிய காந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ டின்
(வரி உள்பட) 1,200.00

**ரீபைண்டு ஆயில்**

சுத்திகரிக்கப்பட்டது.
15கிலோ டின் (வரி உள்பட) 1,725.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு(வரி உள்பட) 1,140.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 570.00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜன.20-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,600 | 98.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,080 | 110.00 |
| து.பருப்பு | ரூ. 5,800 | 60.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 5,200 | 54.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,100 | 64.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,400 | 78.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,200 | 44.00 |
| மொச்சை பயிறு (ஆவரை) | ரூ. 3,900 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4,500 | 48.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 3,200 | 62.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,400 | 56.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 4,800 | 51.00 |
| சர்க்கரை | ரூ. 2,900 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, ஜன.20-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 7,030
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8,436
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 10,046
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 10179
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,460
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 10,686
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 13,273

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜன.20-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 30-40 | கவர்கோஸ் | ரூ. | 17-20 |
| கத்தரிக்காய் | ரூ. | 20-28 | புதினா | ரூ. | 18-20 |
| வெண்டைக்காய் | ரூ. | 24-30 | காலிப்பிளவர் | ரூ. | 16-20 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 4-5 | பொறியல் தட்டை | ரூ. | 14-16 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 8-9 | பச்சை மொச்சை | ரூ. | 20-28 |
| புடலை | ரூ. | 10-12 | தேங்காய் | ரூ. | 7-12 |
| பீர்க்கான்காய் | ரூ. | 16-20 | பட்டாணி | ரூ. | 30-90 |
| சுரைக்காய் | ரூ. | 7-10 | கறிவேப்பிலை | ரூ. | 45-00 |
| பாகற்காய் | ரூ. | 12-16 | பூண்டு | ரூ. | 85-90 |
| கொத்தவரை | ரூ. | 16-18 | அகத்தி | ரூ. | 16-00 |
| பூசணிக்காய் | ரூ. | 6-7 | வாழைக்காய் | ரூ. | 24-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 8-10 | குடைமிளகாய் | ரூ. | 30-34 |
| மேராக்காய் | ரூ. | 10-15 | சாதா பீன்ஸ் | ரூ. | 20-24 |
| பச்சை மிளகாய் | ரூ. | 24-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 36-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 32-00 | கறிபீன்ஸ் | ரூ. | 18-20 |
| சின்னவெங்காயம் | ரூ. | 12-15 | புஸ்பீன்ஸ் | ரூ. | 30-36 |
| பெரியவெங்காயம் | ரூ. | 9-11 | காளான் | ரூ. | 80-150 |
| இஞ்சி | ரூ. | 20-00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-14 |
| முருங்கைக்காய் | ரூ. | 70-75 | திராட்சை | ரூ. | 28-32 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 16-20 | மாங்காய் | ரூ. | 30-40 |
| சேனைகிழங்கு | ரூ. | 14-00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 12-16 |
| கருணைகிழங்கு | ரூ. | 20-00 | கொய்யா1கிலோ | ரூ. | 18-20 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 15-00 | மாதுளை1கிலோ | ரூ. | 80-150 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 12-15 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 10-12 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 10-12 | வரமிளகாய் | ரூ. | 100-120 |
| சிறுகிழங்கு | ரூ. | 18-00 | ஆப்பிள் | ரூ. | 100-130 |
| முள்ளங்கி | ரூ. | 8-14 | சாத்துக்குடி | ரூ. | 34-32 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 24-28 | நெல்லிக்காய் | ரூ. | 30-40 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 18-24 | ஆரஞ்சு | ரூ. | 34-40 |
| நூல்கோல் | ரூ. | 18-22 | வெள்ளரி | ரூ. | 18-34 |
| கொத்தமல்லி | ரூ. | 20-22 | புளி 1 கிலோ | ரூ. | 100-110 |
| ட்ரினிட்ஸ் | ரூ. | 18-22 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 28-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 12-14 | அவரை | ரூ. | 20-24 |
| | | | நிலக்கடலை | ரூ. | 30-32 |
| | | | மக்காச்சோளம் | ரூ. | 12-24 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 29,000 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 29,500 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 30,500 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 11,500 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 13,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 8,000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 7,800 |
| கொப்பரை நாடன் | ரூ. 5,050 |
| கொப்பரை ராசு | ரூ. 4,860 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 5,060 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 6,900 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6,200 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 17,900 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 18,900 |
| ரப்பர் பால் | ரூ. 13,600 |
| காப்பி | ரூ. 9,850 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5,600 |
| நேந்திரகாய் | ரூ. 2,100 |
| இஞ்சி | ரூ. 450 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜன.20-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,1810 | 117.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1,180 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1250 | 80.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1080 | ------ |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1230 | 80.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,520 | 105.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1400 | 100.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,570 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,150 | 65.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,600 | 110.00 |
| வனஸ்பதி | | |
| வில்வி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1040 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.165.00 | அதிகபட்சவிலை | ரூ.250.00 |
| சராசரி விலை | ரூ.153.50 | சராசரி விலை | ரூ.220.18 |
| குறைந்தபட்சவிலை | ரூ.130.00 | குறைந்தபட்சவிலை | ரூ.193.00 |

**பட்டு நூல் ரூ.1,632**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 20,544.00 | 20,544.00 | 20,560.00 |
| ஒரு கிராம் | 2,568.00 | 2,568.00 | 2,570.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 53,115.00 | 56,900.00 | 57,000.00 |
| ஒரு கிராம் | 56.90 | 56.90 | 57.00 |